செ.வெ.எண்:17 நாள்:14.04.2021

**கிருஷ்ணகிரி அரசு தலைமை மருத்துவமனையில், 450 படுக்கைகளுக்கு 24 மணிநேரமும் தங்குதடையின்றி நேரடியாக பிரணவாயு (Oxygen) செலுத்தும் வகையில், புதியதாக அமைக்கப்பட்டுள்ள 13 ஆயிரம் லிட் கொள்ளவு கொண்ட, LIQUID OXYGEN TANK அமைக்கப்பட்டுள்ளது.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தகவல்**

---

கிருஷ்ணகிரி அரசு தலைமை மருத்துவமனையில் இன்று (14.04.2021) கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக, கொரோனா சிறப்பு சிகிச்சை மையம் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா சிறப்பு கட்டுப்பாட்டு மையத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

**மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:**

கொரோனா வைரஸ் நோய் உலகளாவிய பொதுசுகாதார அவசர நிலையாக அறிவிக்கப்பட்ட நிலையில், உலக சுகாதார நிறுவனம் இதனை உலகளாவிய நோய் தொற்றாக அறிவித்த சூழ்நிலையில் நாடு முழுவதும் முழு ஊரடங்கு உத்தரவு அறிவிக்கப்பட்டது. இதனால் பொதுமக்களின் அன்றாட வாழ்வு மற்றும் பொருளாதார சூழ்நிலை பாதிக்கப்பட்டது. இதுபோன்ற சூழ்நிலை மீண்டும் ஏற்பட கூடாது என்பதற்காக மாவட்ட நிர்வாகத்தின் மூலம் பல்வேறு பாதுகாப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன்படி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 2 அரசு கொரோனா தொற்று பரிசோதனை ஆய்வகங்கள் மற்றும் 3 தனியார் கொரோனா தொற்று பரிசோதனை ஆய்வகங்கள் மூலம் நாளதுவரை 2,49,624 கெரோனா தொற்று தொடர்பான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் 1,01,635 நபர்களுக்கு கொரோனா தடுப்பூசி போடப்பட்டுள்ளது. 974 படுக்கை வசதிகளுடன் கொரோனா சிறப்பு சிகிச்சை மையங்கள் தயார் நிலையில் உள்ளது. நாளதுவரை 9,330 நபர்கள் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டு, 8,547 நபர்கள் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். தற்பொழுது 664 நபர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நாடு முழுவதும் கொரோனா வைரஸின் பரவல் தற்பொழுது அதிகரித்து வரும் சூழ்நிலையில் பொதுமக்கள் அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி, அரசின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி, வணிக வளாகங்கள், அங்காடிகள், காய்கறி சந்தை உள்ளிட்ட பொது இடங்களுக்கு செல்லும் பொழுது முககவசம் கட்டாயம் அணிந்து, சமூக இடைவெளியை கடைபிடிக்க வேண்டும்.

அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றாமல் இயங்கும் வணிக வளாகங்கள், அங்காடிகள் மற்றும் முக கவசம் அணியாமல் வரும் தனி நபருக்கு அபராதம் விதிக்கப்படும். மேலும், பொது இடங்களுக்கு தொடர்ந்து முக கவசம் அணியாமலும், சமூக இடைவெளியை கடைபிடிக்காமலும், அரசின் விதிமுறைகளை மீறுவோர் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக, மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் கிருஷ்ணகிரி அரசு தலைமை மருத்துவமனையில் 190 படுக்கை வசதிகள் கொண்ட கொரோனா சிறப்பு சிகிச்சை மையம் மற்றும் கொரோனா தடுப்பூசி மையம் ஆகியவற்றை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். மேலும் அரசு தலைமை மருத்துவமனையில் உள்ள 512 படுக்கைகளில் 450 படுக்கைகளுக்கு 24 மணிநேரமும் தங்குதடையின்றி நேரடியாக பிரணவாயு (Oxygen) செலுத்தும் வகையில் சுமார் ரூ. 30 லட்சம் மதிப்பீட்டில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள 13 ஆயிரம் லிட் கொள்ளவு கொண்ட, LIQUID OXYGEN TANK மற்றும் AIR VAPORIZING COLUMN ஆகியவற்றை பார்வையிட்டு அதன் செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்தார்.

தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் 24 மணி நேரமும் செயல்பட்டு வரும் கொரோனா சிறப்பு கட்டுப்பாட்டு மையத்தினை பார்வையிட்டு போர்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுகளின் போது, கிருஷ்ணகிரி அரசு மருத்துவகல்லூரி முதல்வர் மரு.முத்துசெல்வன், துணை இயக்குநர் (சுகாதாரபணிகள்) மரு.பி.கோவிந்தன் மற்றும் துறை சார்ந்த மருத்துவர்கள், அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.